# நற்றிணையில் மலர்கள்

# Flowers in Nattrinai

***சு. ராஜலட்சுமி***
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
(பதிவு எண் - 19111244022010)
தமிழ்த்துறை மற்றும் தமிழியல் ஆய்வு மையம்
சாராள் தக்கர் கல்லூரி (தன்னாட்சி)
திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா
(மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் அங்கீகாரம் பெற்றது)

**S. Rajalakshmi**
*Full Time Doctoral Researcher*
*(Reg. No. - 19111244022010)*
*Department of Tamil and Centre for Tamil Studies*
*Sarah Tucker College (A),*
*Tirunelveli, Tamil Nadu, India*
*(Affiliated to Manonmaniam Sundaranar University)*

***முனைவர் ஆ. ஜோஸ்பின் ரேணுகா***
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
ஹோலிகிராஸ் ஹோம் சயின்ஸ் கல்லூரி
தூத்துக்குடி, தமிழ்நாடு, இந்தியா
(மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் அங்கீகாரம் பெற்றது)

**Dr. A. Josphine Renuka**
*Assistant Professor, Department of Tamil*
*Holy Cross Home Science College*
*Thoothukudi, Tamil Nadu, India*
*(Affiliated to Manonmaniam Sundaranar University)*

***முனைவர் சா. தேவநேசம் மேபல்***
இணைப்பேராசிரியர் மற்றும்
தமிழ்த்துறைத் தலைவர்
தமிழ்த்துறை மற்றும் தமிழியல் ஆய்வு மையம்
சாராள் தக்கர் கல்லூரி (தன்னாட்சி)
திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா
(மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் அங்கீகாரம் பெற்றது)

**Dr. S. Devanesam Mempal**
*Associate Professor & Head*
*Department of Tamil and Centre for Tamil Studies*
*Sarah Tucker College (A),*
*Tirunelveli, Tamil Nadu, India*
*(Affiliated to Manonmaniam Sundaranar University)*

## ஆய்வுச் சுருக்கம்

*சங்க இலக்கியம் பழந்தமிழர் வாழ்க்கையையும், இயற்கையோடு ஒன்றிவாழ்ந்த வாழ்க்கை முறையினையும் எடுத்துக் கூறுகிறது. சங்க இலக்கியங்களை காலத்தைக் காட்டும் கண்ணாடி எனலாம். உலகம் தழைத்து இனிது ஓங்கப் புலவர்கள் அருளி செய்தவை சங்க இலக்கிய நூல்கள் ஆகும். பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும் பதினெண் மேற்கணக்கு நூல்கள் என்று அழைக்கப்படுகிறது. எட்டுத்தொகை நூல்களில் முதலாவதாக இடம் பெற்றுள்ள நூல் "நற்றிணை" ஆகும். இந்நூல் தனிப்பாடல்களாக பல புலவர்களால் பாடப்பட்டு பின்னர் தொகுக்கப்பட்டது. "நல்" என்னும் அடைமொழியும் அகப்பொருள் ஒழுக்கத்தைச் சுட்டும் "திணை" என்னும் பெயரும் சேர்ந்து நற்றிணை என பெயர் பெற்றது. இந்நூல் ஒன்பது அடி முதல் பன்னிரெண்டு அடிகள் வரை அமைந்த நானூறு பாடல்களைக் கொண்டது. இதைத் தொகுத்தவர் யார் என தெரியவில்லை. தொகுப்பித்தவர் பண்ணாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி ஆவார். இதனை "நற்றிணை நானூறு" என்றும் கூறுவர். இயற்கையை பாடுவது சங்க இலக்கியங்களின் சிறப்பு என கூறலாம். சங்ககால மக்கள் தாவரங்கள், விலங்குகள், பறவைகள் என அனைத்து உயிர்களுடனும், இயற்கை எழிலுடனும் இணைந்து வாழ்ந்தார்கள். தாவரங்களின் ஒரு பகுதியான மலர்களைப் பற்றி இக்கட்டுரையில் காணலாம்.*



***திறவுச் சொற்கள்:*** *மலர்கள், அடும்பு மலர், குமிழ மலர், எறுழமலர், புன்னைமலர், சரக்கொன்றை மலர்.*



## Abstract

*Sangam literature describes the life of the ancients and the way of life that lived in harmony with nature. Sangam literature can be called a mirror of time. Sangam literary text books are the creations of ancient Tamil poets who spread the world with peace and joy through their literals. Pathupattu and Ettu Thogai are known as the Pathinen keel kanaku books. The first book among the Ettu Thogai is 'Natrinai'. The epithet 'Nal' along with the name 'Thinai' which refers to internal morals becomes Natrinai. The book consists of four hundred hymns ranging from nine feet to twelve feet. It is not known who compiled it. It was Grouped by Pannadu thantha Pandyan Maran Valuthi. It is also known as Natrinai Nanuru. Singing of nature can be said to be the specialty of Sangam literature. Sangam people lived in harmony with all living things like plants, animals, birds and nature. This article describes about flowers in natrinai which are part of plants.*



***Keywords****: Flowers, Goat's Foot Flower, Bubble Flower, Paper Flower, Smile Flower, Golden Rain Tree Flower*

**Citation**

Rajalakshmi, S Josphine Renuka, A. "Flowers in Nattrinai." *Journal of Tamil Culture and Literature*, vol. 4, no. 2, 2024, pp. 10–14.

**முன்னுரை**

*சங்க இலக்கியத்தில் எட்டுத்தொகை நூல்களுள் முதலில் வைத்துப் போற்றப்படும் சிறப்பிற்குரிய நூல் நற்றிணையாகும். சங்ககால மக்கள் இயற்கையோடு இரண்டறக் கலந்து வாழ்ந்தனர் என்பதனை சங்க இலக்கியங்கள் மூலமாக அறிய முடிகிறது. அகம், புறம் என வாழ்க்கையை இரண்டாகப் பகுத்தனர். நிலத்தை நானிலமாக பிரித்து அந்நிலத்துள் முறைமை திரிந்த நிலத்தை ''பாலை'' என பெயர் கொண்டு ஐந்திணை வகுத்தனர். ஒவ்வொரு திணைக்கும் அந்தந்த நிலப்பகுதியில் சிறந்து விளங்கும் ''மலர்'' அல்லது ''மரத்தின்'' பெயரை நிலத்தின் பெயராக இட்டனர். இயற்கையின் அழகையும், இயல்பையும் சங்ககால மக்கள் நன்கு உணர்ந்திருந்தனர். மலர்களைப் பற்றியும், அவற்றின் சிறப்புகளைப் பற்றியும் இக்கட்டுரையில் காணலாம்.*

**மலரின் வேறு பெயர்கள்**

*மலர்களின் பருவங்களை ஏழு படிநிலைகளாக பிரிக்கலாம். இதனை பதின்மூன்று பெயர்கள் கொண்டு அழைக்கப்படுகிறது. அவை,*

- *அரும்பு - அரும்பும் (தோன்றும்) நிலை.*
- *நனை - அரும்பு வெளியில் நனையும் நிலை.*
- *முகை - நனை முத்தாகும் நிலை.*
- *மொக்கு - முகை மொக்குள் உள்ளது நாற்றம்போல் (திருக்குறள் - எண் : 1274) நாற்றத்தில் உள்ளடக்க நிலை.*
- *முகில் - மணத்துடன் முகிழ்த்தல்.*
- *மொட்டு - அரும்பு சற்று பெரிதாக வளர்ந்த நிலை.*
- *போது - மொட்டு மலரும் பொழுது காணப்படும் புடை நிலை.*
- *மலர் - மலரும் மலர்.*
- *பூ - பூத்த மலர்.*
- *வீ - உதிரும் மலர்.*
- *பொதும்பர் - செடியில் பூக்கள் பூத்துக் குலுங்கி நிற்கும் நிலை.*
- *பொம்மல் - உதிர்ந்து கிடக்கும் புதுப்பூக்கள்.*
- *செம்மல் - உதிர்ந்த மலர்கள் பழம் பூவாய்ச் செந்நிறம் பெற்று அழுகும் நிலை.*

*எனப் பதின்மூன்று பெயர்களில் தனித்தனியாகவும் சங்க இலக்கிய பாடல்களில் மலர்கள் குறிப்பிடப்படுகிறது.*

**அடும்பு மலர்**

*கடற்கரை ஆற்றங்கரை ஓரங்களில் வளரக்கூடியது அடும்பு. அடும்பு அல்லது அடம்பு என்பது ஒருவகையான படரும் கொடியாகும். இதற்கு ''ஆட்டுக்கால் அடும்பு'' என்ற பெயரும் உண்டு. அடும்பு இலைகள் ஆட்டுக்கால் போன்ற தோற்றம் கொண்டது. இலைகள் கடினமாகவும், பூக்கள் நீல நிறத்திலும் காணப்படும். நெய்தல் நிலத்தில் வளரக்கூடியது என நற்றிணைப் பாடல்கள் குறிப்பிடுகிறது.*

***கொடுங்கழி மருங்கின் அடும்பு மலர் கொய்தும்,***
***கைதை தூக்கியும், நெய்தல் குற்றும். (நற்றிணை - பாடல் எண் : 349)***

*தலைவிக்கு அடும்பு மலர்களைப் பறிக்கவும், தாழை மலரைக் கொய்யவும் உதவினேன். நெய்தல் மலரையும் தாழை மலரையும் பறித்துக் கொடுத்தேன்.*

***அடும்பும் கொன்றையும் வன்னியும் மத்தமும்***
***துடும்பல் செய் சடைத்தூ மணிச் சோதியான்; (ஐந்தாம் திருமுறை : 84)***

*அடும்பு மலரை சிவபெருமான் தனது தலையில் அணிந்திருப்பதாக திருநாவுக்கரசர் தேவாரத்தில் குறிப்பிடுகிறார்.*

**குமிழ மலர்**

*நற்றிணையில் கூறப்படும் குமிழ மலர் குறிஞ்சிப்பாட்டில் இடம்பெறவில்லை. குமிழமலர் அழகிய மஞ்சள் நிறத்தில் காணப்படும்.*

***அத்தக் குமிழின் ஆயிதழ் அலரி***
***கல்லென வரிக்கும் புல்லென் குன்றம் (நற்றிணை - பாடல் எண் : 286)***

*குமிழ மலர் அசைவது போல் ஒளி மேவும் குழை அசைந்தாடுமாறு புனைந்த தோழி.*

***இமிழ் இசை வானம் முழங்க, குமிழின் பூப்***
***பொன் செய் குழையின் துணர் தூங்க, தண் பதம் (கார்நாற்பது - பாடல் எண் : 28)***

*ஒலிக்கும் இசையினை உடைய வானம் முழங்குதலைச் செய்ய குமிழின் மலர்கள் பொன்னாற் செய்யப்பட்ட குழை போல கொத்துக் கொத்தாய் தொங்கும்.*

**எறுழ மலர்**

*எறுழம் அல்லது எறுழ் என்று அழைக்கப்படும். நெருப்புப்போன்று தோன்றும் எறுழம்பூ. அடர்ந்த புதர்களில் உள்ள நல்ல பூங்கொத்துக்களை உடைய இவை, மழைக்காலம் நீங்கியதால் தம் இயல்பான நிறத்தினின்று மாறி வெண்மைநிறமாக மாறியது.*

***வரு மழைக்கு எதிரிய மணி நிற இரும் புதல்***
***நறை நிறம் படுத்த நல் இணர்த் தெறுழ் வீ. (நற்றிணை - பாடல் எண் : 302)***

*பெரிதாகப் பெய்கின்ற மழையை நோக்கிப் பூத்திருக்கின்ற எறுழ மலர், நீல மணி போன்ற நிறம் கொண்டது.*

***களிற்று முக வரியின் தவறும் வீ பூப்பச் (புறநானூறு - பாடல் எண் : 119)***

*களிற்று யானை நெற்றி போல மழைக்காலத்தில் எறுழ மலர் பூத்துக் குலுங்கும்.*

**புன்னை மலர்**

*புன்னை மிகவும் அழகிய தோற்றம் கொண்ட மரங்களில் ஒன்றாகும். இதன் இலைகள் சற்றுப் பெரியதாகவும், பளபளப்பாகவும் இருக்கும். வெண்ணிற பூவும் மஞ்சள் நிறப் பூந்தாதுப் பகுதியும் கொண்டது.*

***கருங்கோட்ப் புன்னை மலரில் தா தருந்தி***
***இருங்களிப் பிரசம் ஊத அவர் (நற்றிணை - பாடல் எண் : 311)***

*கரிய கிளைகளை உடைய புன்னை மரங்களில் உள்ள தேனைப் பருகி களித்த வண்டுகள் ஒலி எழுப்பும்.*

***இன்ன தாகுதல் கொடிதே புன்னை***
***அணிமலர் துறை தொறும் வரிக்கும் (ஐங்குறுநூறு - பாடல் எண் : 117)***

*கடற்கரையின் கண் விளங்கும் புன்னை மரங்களின் அழகிய மலர்கள் ஒழுங்கு திகழ உதிர்ந்தனவாய் மேவும் கருநீலக் கடற்கரை துறையின் தலைவன்.*

**சரக்கொன்றை மலர்**

*கொன்றை அல்லது சரக்கொன்றை என்று அழைக்கப்படுகிறது. பொன்னிறமான கொன்றை மலர்கள் சரம் சரமாக பூத்துக் குலுங்கும்.*

***புழற்காய்க் கொன்றைக் கோடு அணி கொடி இணர்***

***ஏகல் மீமிசை மேதக மலரும்; (நற்றிணை - பாடல் எண்: 296)***

*காய்களை உடைய கொன்றை மரத்தின் கிளைகளில் கொடி கொடியாகப் பரவித் தொங்கும் சரக்கொன்றையின் பூங்கொத்துகள் பெரிய மலையின் உயர்ந்த பக்கத்தில் மேன்மையோடு மலர்ந்து விளங்கும்.*

***பொன்னென மலர்ந்த கொன்றை மணியெனத் (ஐங்குறுநூறு - பாடல் எண் : 420)***

*பொன்னிறமான கொன்றை மலர் தலைவியின் மேனி வண்ணத்தைப் போன்று இருந்தது.*

**முடிவுரை**

*மலர் என்பதற்கு அரும்பு, நனை, முகை, மொக்கு, முகில், மொட்டு போது, மலர், பூ, வீ, பொதும்பர் பொம்மல் செம்மல், எனப் பல பெயர்கள் இருப்பினும் பூ என்னும் சொல்லே அதிக அளவில் பயன்படுத்தப்படுகிறது. பூ என்பது பொதுப்பெயர் ஆகும். மலர் என்பதற்கு மலர்ச்சியானது, தோன்றுதல், நிறைதல், விரித்தல், மொட்டு அவிழ்த்தல் என பல பொருட்கள் உள்ளது. மலர்கள் சங்ககால மக்களால் போற்றப்பட்டது. நற்றிணையில் ஆம்பல், குவளை, தாமரை, நெய்தல், குமிழமலர், புன்னைமலர், பாதரி, செங்கருங்காலி, காட்டுமல்லிகை, பீர்க்கப்பூ, செண்பக மலர், கொன்றை மலர், வேப்பம்பூ, நொச்சி மலர், செங்காந்தள், அடும்பு மலர், எறுழ மலர் என பல வகையான மலர்கள் காணப்படுகிறது.*

**துணை நூற்பட்டியல்**


1. *இராமசுப்பிரமணியம். வ. த. உரையாசிரியர். நற்றிணை, டிசம்பர்-2018, சென்னை.*
2. *இராசமாணிக்கம். மா. உரையாசிரியர். பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், அப்பர் அச்சகம், சென்னை.*
3. *இராமசுப்பிரமணியம். வ. த. உரையாசிரியர். ஐங்குறுநூறு, 2011, திருமகள் நிலையம்.*
4. *துரைசாமிப்பிள்ளை. சு. ஔவை. உரையாசிரியர். புறநானூறு, தொகுதி 1,2, 2009, பூம்புகார் பதிப்பகம், சென்னை.*
5. *நாராயண வேலுப்பிள்ளை. எம். உரையாசிரியர். திருக்குறள், மார்ச் - 2015, நர்மதா பதிப்பகம், சென்னை.*
6. *மாணிக்கவாசகர். திருவாசகம், பதிப்பு - 1998 தருமையாதீன வெளியீடு, தருமபுரம்.*


## References


1. Ramasubramaniam, V. D. Narrator. Natrinai, December - 2018, Chennai.
2. Rasamanikkam, Ma, Narrator. Pathinen Keelkanaku Noolgal, Appar press, Chennai.
3. Ramasubramaniam. V. D. Narrator. Iynkurunooru, 2011, Thirumal Station.
4. Duraisamipillai. Su. Auvai. Narrator. Purananoor, Volume 1,2, 2009, Poombukar Publishing House.
5. Narayana Velupillai. M. Narrator. Thirukkural, March - 2015, Narmada Publishing House, Chennai.
6. Manikkavasakar. Thiruvasagam, Edition - 1998, Darumaiyathina Publication, Dharmapuram.